**மாற்றத்திற்கான முகவர்களும், அகிம்சைச் செயல்பாடுகளும்.**

சாதாரண மக்களுக்கு தங்களுக்கான உரிமைகள், சுதந்திரம் நீதி ஆகியவற்றைப் பெறுவதற்கான போராட்ட முறையாக அகிம்சைச் செயல்பாடுகள் இருக்கின்றன. இது பெரும்பாலும் நன்னெறி சார்ந்ததாகவோ, அல்லது ஒழுக்க நெறி சார்ந்த அகிம்சைச் செயல்பாடாகவோ உள்ளது. ஆனால் இதை நன்னெறி அல்லது ஒழுக்க நெறி போன்றவை சாராத தனித்துவ மிக்க கருத்துருவாக அணுக இருக்கிறேன். இதன் விரிவாக, இது பிரச்சினைகளின்போது எப்படி அறிவுபூர்வமான, சாதகமான உந்து கோலாக எப்படி பயன்படுகிறது என்பதைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ,

அகிம்சைச் செயல்பாடுகள், சமூகத்தில் அதிகாரம் என்பது மக்களின் ஒப்புதலோடும், கீழ்ப்படிதலோடும் பெறப்படுகிறது என்ற நுண்ணோக்கின் அடிப்படையில்தான் அமைந்திருக்கின்றன. இதற்கு நேர்மாறாக, சமூகத்தில் யாரிடம் செல்வம் குவிந்திருக்கிறதோ, வன்முறைக்கான அதிகபட்சத் திறன் இருக்கிறதோ அவர்களிடம்தான் அதிகாரம் இருக்கும் என்பதுதான் இப்போதைய புரிதலாக உள்ளது. இந்த பூமிக் கோளின் துணை அமைப்பு என்று பொருளாதாரத்தைக் கூறலாம். அதபடி, இதுவும் அக்கோளின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதுதான். அதே போலத்தான், அதிகார அமைப்பும். இது பெரும் செல்வம், வன்முறை ஆகியனவற்றின் அடிப்படையில் உருவானது போலத் தெரிகிறது. ஆனால், இதுவும் இங்கு வாழும் பல கோடிக்கணக்கான மக்களின் பெரும்பாலானவர்களின் நடத்தை, மற்றும் அவர்களது கீழ்ப்படியும் பாங்கு ஆகியவற்றின் துணை அமைப்புகள்தாம். இந்த மக்கள் தங்களது விசுவாசங்கள், நடத்தைகள், மற்றும் கீழ்ப்படிதல்கள், ஆகியவற்றை மாற்றினால் சமூகம் மற்றும் உலகத்தின் அதிகார சமன்பாடும் மாறும். இதை எளிமையாகச் சொன்னால், மக்கள் கீழ்ப்படிய மறுத்தால், ஆட்சியாளர்களோ, பெரு நிறுவனங்களோ அவர்களை ஆள முடியாது.

ஆகவே, அகிம்சைச் செயல்பாடு, மக்களின் விசுவாசங்களை, நடத்தையை, கீழ்ப்படிதல் முறைகளை, ஒட்டு மொத்த அளவில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் அதிகாரத்தைப் பெறுகிறது. இது இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவ்வப்போது பெற்ற வெற்றிகளைப் போல நாடக பாணியில் இருக்கலாம். அமெரிக்க குடிமைச் சமூகம் உரிமை இயக்கத்தின் பல்வேறு தொழிலாளர் போராட்டங்கள் (1960களின் நடுப் பகுதியில் செயல்பட்ட ஒன்றுபட்ட பண்ணைத் தொழிலாளர்கள் இயக்கம்.), மற்றும் ஃபெர்டினாண்ட் மார்க்கஸ் (Ferdinand Marcos - 1986), அகஸ்டோ பினோசெட்

(Augusto Pinochet - 1988), தென் ஆப்பிரிக்காவின் நிறவெறி அரசு (1980 - 90) ஸ்லோபோடன் மிலோசெவிக் (Slobodan Milosevic - 2000), மற்றும் உக்ரேனின் எதேச்சாதிகார ஆட்சி ஆகியோர்களின் வீழ்ச்சியை உதாரணங்களாகக் கூறலாம்.

அல்லது, மாற்றங்கள் இதை விட நுட்பமாக நிகழலாம். மக்கள் உள்ளூரைச் சேர்ந்தவர் உரிமையாளராக இருக்கும் தொழிலை ஆதரிக்கலாம். குறிப்பிட்ட தயாரிப்பைப் புறக்கணிக்கலாம். அல்லது, மாற்று நிறுவனங்களையும், பொருளாதார முறைகளையும் ஆதரிப்பது. பல விதமான முறைகள், அவற்றின் வெளிப்பாடுகள் என்று எதுவாக இருந்தாலும், அகிம்சைச் செயல்பாடுகள் மூன்று விதப் பிரிவுகளுக்குள் அடங்கும். எதிர்பாராதவற்றை, செய்யக் கூடாதவைகளை, அனுமதி இல்லாதவற்றை மக்கள் செய்வது. அடுத்தது, செய்யாமல் விடும் செயல்கள் - அதாவது மக்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட, செய்ய வேண்டிய, செய்யத் தேவையான செயல்களைச் செய்யாமல் விடுவது. அடுத்ததாக, மேற்குறிப்பிட்ட இரண்டு வகையான செயல்பாடுகளையும், திட்டமிட்டுச் செயவது மற்றும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விடுவது

மக்களின் கீழ்ப்படியும் தன்மை மற்றும் நடத்தை முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமானால், முதலில் அவர்கள் ஏன் கீழ்ப்படிகிறார்கள், நடத்தைகளுக்கான காரணங்கள் என்ன என்பதை முதலில் அறிய வேண்டும். காரணங்கள் சமூகத்திற்குச் சமூகம் வேறுபடலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையிலும் இரண்டு பொதுக் காரணங்கள் இருக்கின்றன. நான் பல செயல்பாட்டாளர்களுடனும், அமைப்பாளர்களுடனும் உலகம் முழுதும் சுற்றியிருக்கிறேன். அவர்களுக்கு வேறு வகையில் நடந்துகொள்ளத் தெரியாதது முதல் காரணம். அப்படி மாறுபட்டு நடந்துகொண்டால் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இல்லாதது மற்றொரு காரணம். சமூகத்தில் பெரும்பாலான மக்களுக்கு, உண்மையான அதிகாரத்தை வைத்திருப்பவர்கள் தாங்கள்தான் என்பது மறந்து போய்விட்டது.

முறைப்படுத்தப்பட்ட கல்வி முறை, பெரு நிறுவனங்கள், அரசுகள் மற்றும் ஊடகங்கள், ஆகியன சேர்ந்து, அதிகாரம் என்பது அரசுக் கட்டிடங்களில் இருக்கும் சில தனிப்பட்ட நபர்கள், பெருநிறுவனங்களின் தலைமையகங்கள், பணம், ஆயுதங்கள் (இவற்றின் மீது அவர்கள் ஏற்கெனெவே ஏகபோக ஆதிக்கம் செய்கின்றனர்) ஆகியனதான் அதிகார சக்தியின் உச்சம் என்று நினைக்கிறார்கள். இந்தப் புரிதல் அதிகாரத்தில்

இருப்பவர்களுக்கு, அவர்களது நோக்கங்களுக்கு ஒத்துப் போவதாகவே உள்ளது.

வரலாற்றில் வெற்றிகரமான அகிம்சை இயக்கங்கள், பொது லட்சியம் ஒன்றிற்காகக் கட்டமைக்கப்பட்ட திட்டங்களுடன் மக்களின் ஒன்றுபட்ட செயல்பாடுகள் பெரும் ராணுவங்கள், பணபலம் ஆகியவற்றைவிட மிக வலுவானது என்ற உண்மையை மக்கள் உணருமாறு செய்திருக்கின்றன. மண்ணில் வேரூன்ற வேண்டும் என்று நினைக்கும் எந்த ஒரு தற்கால மக்கள் அமைப்பும், இந்த உண்மையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் வலுவான மையக் கொள்கையே இது என நினைவுபடுத்த வேண்டும்.

இதற்கு அடுத்த கட்டமாக, வெற்றி பெற்ற இயக்கங்கள், மக்கள், சக்தி மிகுந்தவர்கள் என்பதையும் எடுத்துக் கூறுவதோடு, தெளிவான, அடையக்கூடிய நோக்கங்களை உருவாக்கிக் கொடுப்பது மட்டுமின்றி, அவற்றின் வெற்றிகளை ஆவணப்படுத்தி, அவற்றை அனைவரும் அறியச் செய்கின்றனர். வெற்றிகள் சிறிதாக இருந்தாலும், அதை வைத்து, மக்களைத் திரட்டும் பணியின் மீதான தாக்கம் மிகப் பெரியது. உதாரணமாக அமெரிக்க குடிமைச் சமூக உரிமைகள் இயக்கம் 1955 - 56 காலகட்டத்தில், மாண்ட்கோமரி, அலபாமா, நகரங்களில், பேருந்துகளில் கடைப்பிடிக்கப்பட்ட பிரிவினையை முடிவுக்குக் கொண்டுவருவதில் தங்களது பலத்தை ஒருமைப்படுத்தினர். இதன் பிறகு, 1960இல், நாஷ்வில்லியில் மதிய உணவு வரிசையில் கடைபிடித்த பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

இந்திய விடுதலை இயக்கம், 1930 - 31 காலகட்டத்தில், பிரிட்டிஷாரிடமிருந்து உப்புச் சட்டங்கள் உள்ளிட்ட பலவற்றில் சலுகைகள் பெறுவதில் முனைந்து பணியாற்றியது. இது போன்ற நோக்கங்களில் பெற்ற வெற்றி, தென் பகுதி அமெரிக்கா முழுவதிலும் பாகுபாட்டுப் பிரிவினையை மாற்றியது, அல்லது இந்தியாவில் சுதந்திரம் பெற்றது ஆகியவற்றோடு ஒப்பீடளவில் சிறியவைதான். ஆனால் அவற்றின் உண்மையான தாக்கம் என்பது, இவற்றிற்கான வினையூக்கியாகச்
செயல்பட்டதுதான். இந்த வெற்றிகள் மக்களுக்குச் சொன்ன விஷயம், அவர்களது செயல்பாடுகள் முக்கியமானவை. அவற்றால் வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதுதான். இதன் காரணமாக இது போன்ற இயக்கங்களுக்கு ஆதரவு பெருகி, மக்கள் கூட்டம் திரண்டதும்,

இந்த இயக்கங்களை, தேசிய மற்றும் சர்வதேச அளவில் அறியச் செய்தது.

அமெரிக்கக் குடிமைச் சமூக இயக்கமோ, இந்திய சுதந்திர இயக்கமோ மேம்பட்ட நன்னெறி சார்ந்த நிலைப்பாடுகளை முன்னிறுத்தியதால் மட்டும் தங்களது நோக்கங்களை வென்றெடுக்கவில்லை. கடுமையான உழைப்பு, ஆக்கபூர்வமான செயல்பாடுகள், அரசியல் நிலை குறித்த மிகத் திறமையான ஆய்வு ஆகியனவும் சேர்ந்ததால்தான், இந்த வெற்றிகள் சாத்தியமாயின. இவைதான் வெற்றி பெற்ற அனைத்து அகிம்சை சார்ந்த செயல்பாடுகளுக்கும் காரணங்களாக இருந்தன. ஆனாலும் பலரும் இந்த உண்மைகளை உதாசீனம் செய்துவிட்டு, அகிம்சைச் செயல்பாடு என்றாலே, பொது ஆர்ப்பாட்டங்கள், மனக் குமுறலை வெளிப்படுத்துவது, தார்மீக எதிர்ப்பை வெளிப்படுத்துவது என்று நினைக்கிறார்கள். மக்களைக் கவரும் தலைமை, அமானுஷ்ய சக்தி போன்றவைகளும் இதன் வெற்றிக்குக் காரணமாக இருப்பதாக நினைக்கிறார்கள். நிச்சயமாக அப்படி இல்லை. அமைதிக் கோட்பாட்டை கடைபிடிப்பவர்கள், அறநெறி சார்ந்த அகிம்சைக் கொள்கைகளில் பற்றுள்ளவர்கள் ஆகியோர் இதற்குத் தேவையில்லை.

இதற்கு முக்கியத் தேவைகள், மக்களை ஒன்றிணைக்கும் நோக்கம், திறன் மிக்க உபாயங்கள் அடங்கிய திட்டங்கள், பயன் தரும் பொதுமக்கள் தொடர்புத் திறன், சூழ்நிலைக்குத் தக்க செயல்பாடுகளை அடையாளம் காணும் திறன் ஆகியன. எல்லாத் தேவைகளுக்கும் பொருந்துகிறாற்போல இருக்கும் முறைமை என்று எதுவுமில்லை. அகிம்சைச் செயல்பாடுகள், இடம் சார்ந்தது. இந்தப் போராட்ட முறையை இயக்கும் அடிப்படைத் தரவுகள், அதாவது, ஒப்புதல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியனதாம் எல்லா விதமான போராட்டங்களுக்கும் ஒன்றே தவிர இதன் பயன்பாடு, அந்தந்தச் சமூகங்களையும் அவற்றின் சூழ்நிலைகளையும் சார்ந்தது. இது வெளிப்படையான பொதுத் தளத்தில் நடக்கும் போராட்டமாகவோ, நுகர்பொருள் வாங்குவதில் நுட்பமான மாற்றமாகவோ அல்லது இரண்டின் கலவையாகவோ இருக்கலாம் (பெரும்பாலான இயக்கங்கள், பல்வேறு தரப்பட்ட மக்கள், பல்வேறு மட்டங்களிலான ஈடுபாடுகளுக்குத் தக்கவாறு உருவாக்கப்பட்ட உத்திகளைக் கையாளுகிறார்கள்). இவற்றின் மூலமாக, மக்கள் தங்களுக்கான அரசியல் இடத்தை உருவாக்கிக்கொண்டு, அதை தூண்டு சக்தியாகப் பயன்படுத்தி, வலுவாக அதிகார அமைப்பில் உள்ள நிர்வாக அமைப்பிடமிருந்து சலுகைகளைப் பெற வழிகளை இது அளிக்கிறது.

வரலாற்று ரீதியாகவும், தற்போதைய சூழலிலும், அகிம்சை சார்ந்த நடவடிக்கைகள் மூலமாக மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்துவது

எப்படி என்பது குறித்து அதிர்ஷ்டவசமாக, அறிவுபூர்வமான பணிகள், ஆய்வுகள் மற்றும் அறியச் செய்தல் ஆகியன நடந்தன. அகிம்சைச் செயல்பாடுகளினால் பெறக்கூடிய அதிகாரம், பலம் ஆகியனவற்றை உணர்ந்துகொண்டவர்கள், இதைக் குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என்ற கோரிக்கை பெருகிக்கொண்டுவருகிறது. இதைப் பற்றி நீங்கள், செய்தித்தாள்களில் படிக்க முடியாது. அரசியல்வாதிகளில் பெரும்பாலோர் இதைப் பற்றிப் பேச மாட்டார்கள். ஆனால் உலகம் முழுவதிலும் உள்ள, இதன் வேரடி அமைப்பாளர்கள், குடிமைச் சமூகத்தின் அங்கத்தினர்கள் ஆகியோரிடம் கேட்டால் அவர்களால் விளக்க முடியும். மாற்றங்களின் முகவர்கள் மக்கள்தாம் என்ற புரிதலும், அடிப்படைக் கட்டுமான மாற்றங்கள், கீழ் மட்டத்திலிருந்துதான் வர வேண்டும் என்ற தெளிவும் அவர்களுக்கு இருக்கிறது.

அவர்கள் தங்களை வழிநடத்த எவருக்காகவும் காத்திருக்கவில்லை. ஏனென்றால், பெரும்பாலான அரசுகள் மற்றும் பெருநிறுவனங்களின் தலைவர்கள், மக்கள் தங்களோடு தொடர்பற்றும் தங்கள் செயல்களுக்குத் தங்களைப் பொறுப்பாக்கக்கூடிய வழிமுறைகளை அறியாதவர்களாகவும் இருக்கும்வரை இந்தத் தலைவர்கள் முன்முயற்சி எடுத்து, எது சரியோ அதைச் செய்ய மாட்டார்கள் என்பதை இவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால், உலகெங்கும் உள்ள மக்கள் அகிம்சைச் செயல்பாடுகளை நாடுவது அதிகரித்துள்ளது (வாக்களிப்பது, சட்ட நடை முறை அல்லது மாற்றங்களை உருவாக்க என்றிருக்கும் மற்ற மரபு ரீதியான வழிமுறைகளையும் அகிம்சைச் செயல்பாடாகப் பயன்படுத்துகிறார்கள்). இவற்றின் மூலம் தங்களது சமூகங்களுக்குத் தேவையான மனித உரிமைகள், சுதந்திரம், வெளிப்படைத் தன்மை, பெண்களின் ஆதி குடிமக்களின், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைப் பெறுவதற்கு இதுதான் அறிவுபூர்வமான முறை என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.
அகிம்சை செயல்பாடுகள் எதற்குப் பயன்படுத்தப்பட்டாலும், அதற்கான முன் நிபந்தனை ஒன்றுதான். மக்களின் மனதில் அதிகாரம் என்பதற்கான கருத்துருவை மாற்றியமைப்பதுதான் அந்த முன் நிபந்தனை. மனித இனத்தின் போக்கை மாற்றுவதற்கு, இந்தப் புரிதலை மக்களிடம் பகிர்ந்துகொள்வதும், அவர்களுக்குள்ள அதிகாரத்தை, சக்தியை பற்றி விழிப்புணர்வு கொள்ளச் செய்வதும் மிக அத்தியாவசியமானது.